http://www.maalaimalar.com

Regd. No. CB/026/2024-2026 RNI. No. 30446/77

# மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

கோவை 18-10-2024 (வெள்ளிக்கிழமை) 8 பக்கம் ₹ 5 ★★★ | மலர் 47 இதழ் 307

COIMBATORE 18-10-2024 (FRIDAY) 8 PAGES ₹ 5 | VOL: 47 ISSUE: 307




தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம் சார்பில் கோவையில் பணியின் போது உயிரிழந்த பெண் தொழிலாளியின் குடும்பத்திற்கு உதவித்தொகை வழங்கப்பட்ட காட்சி.

## தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம் சார்பில்

# பணியின் போது இறந்த பெண் தொழிலாளர் குடும்பத்துக்கு உதவித்தொகை

கோவை, அக்.18—

தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் சார்பாக கோவை, ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்ற தொழிலாளர்களுக்கு இடர் ஏற்படும் காலங்களில் பணம் மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் கோவை — திருச்சி ரோடு, ராமநாதபுரத்தில் அமைந்துள்ள இ.எஸ். ஐசார் மண்டல அலுவலகத்தில், காப்பீடு செய்யப்பட்ட நபர்களை சார்ந்தோருக்கான உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

இதில் கோவையில் உள்ள தனியார் உணவு நிறுவனத்தில் பணியாற்றி, பணியின் போது இறந்த காயத்ரி என்பவரின் குடும்பத்தினருக்கு சார்ந்தோருக்கான முதல் நிலுவைத் தவணை உதவித்தொகையாக ரூ. ரூ3,55,248 வழங்கப்பட்டது.

மேலும், மாதந்தோறும் அவரின் குடும்பத்தினருக்கு மொத்த மாதாந்திர உதவித்தொகையாக ரூ.11010 நிர்ணயம் செய்து வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில் இ.எஸ்.ஐ சார் மண்டல அலுவலகத்தின் துணை இயக்குனர்(பொறுப்பு) கே.ஆர்.ரவிக்குமார், துணை இயக்குனர் கார்த்திகேயன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். மேலும் பண உதவி ஆணையை பெற்றுக் கொண்ட சார்ந்திருப்போரும், காப்பிட்டாளர்களும் தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்திற்கும், அங்குள்ள அலுவலர்களுக்கும் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர்.

அத்துடன் இந்த நிகழ்ச்சியில் குறிப்பிட்ட தொழிற்சாலையின் மனித வள மேம்பாட்டு துறை அதிகாரிகளும், பலன் அடைந்தோரின் குடும்பத்தினரும் கலந்து கொண்டு தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் பல்வேறு பலன்களை பற்றிதெரிந்து கொண்டனர்.

மேலும் அவர்கள், தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகத்தின் பலன்களை பற்றி தங்கள் சுற்றத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதாக உறுதிஅளித்தனர்.

Edited and Published by **C.SENTHILKUMAR** for Malar Publications Ltd., and Printed by **J.P.VIJAYARAJ** at Thanthi press, 766, Avinashi Road, Coimbatore-641 018.

# பணியின் போது உயிரிழந்த பெண்ணின் குடும்பத்திற்கு உதவி



**கோவை, அக்.21–**

பணியின் போது உயிரிழந்த பெண்ணின் குடும்பத்திற்கு, இ.எஸ்.ஐ., சார்பில் ரூ.3.55 லட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டது.

கோவையில் தனியார் நிறுவனத்தில், பேக்கிங் துறையில் பணியாற்றி வந்த காயத்ரி, 45, பணியின் போது உயிரிழந்தார். அவரது குடும்பத்திற்கு முதல் நிலுவைத் தவணை உதவித்தொகையாக ரூ.3.55 லட்சம் வழங்கும் ஆணை, ராமநாதபுரம் இ.எஸ்.ஐ., சார் மண்டல அலுவலகத்தில் வழங்கப்பட்டது. காயத்ரி குடும்பத்தினருக்கு மாதாந்திர உதவித் தொகையாக, ரூ.11,010 வழங்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சியில், குறிப்பிட்ட சில தொழிற்சாலையின் மனித வள மேம்பாட்டு துறை அதிகாரிகளும், பலன் அடைந்தோரின் குடும்பத்தினரும் கலந்து கொண்டு, தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் பல்வேறு பலன்களை பற்றி தெரிந்து கொண்டனர். அவர்கள், தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் பலன்களை பற்றி தங்கள் சுற்றத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதாக, உறுதி அளித்தனர்.

இதில் இ.எஸ்.ஐ., சார் மண்டல அலுவலகத்தின் துணை இயக்குனர் (பொறுப்பு) ரவிக்குமார், துணை இயக்குனர் கார்த்திகேயன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# இஎஸ்ஐ சார்பில் உதவித்தொகை

கோவை, அக். 19: தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் (இஎஸ்ஐ) சார்பில் கோவை, ஈரோடு, நீலகிரி, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்ற தொழிலாளர்களுக்கு இடர் ஏற்படும் காலங்களில் உதவித் தொகை மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், கோவை ராமநாதபுரத்தில் உள்ள இஎஸ்ஐ மண்டல அலுவலகத்தில் பயனாளிகளுக்கு உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இஎஸ்ஐ மண்டல அலுவலகத்தின் துணை இயக்குனர் (பொ) ரவிக்குமார், துணை இயக்குனர் கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டு கோவையை சேர்ந்த தனியார் நிறுவனத்தில் பணியாற்றி பணியின் போது உயிரிழந்த காயத்ரி என்ற தொழிலாளியின் குடும்பத்தினருக்கு முதல் நிலுவை தவணை உதவித் தொகையாக ரூ.3 லட்சத்து 55 ஆயிரத்திற்கான ஆணையை வழங்கினர். மேலும் காயத்ரியின் குடும்பத்தினருக்கு மாதந்தோறும் உதவித்தொகையும் நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படும் என அதிகாரிகள் கூறினர்.




தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம் சார்பில் கோவையில் பணியின் போது உயிரிழந்த பெண் தொழிலாளியின் குடும்பத்திற்கு உதவித்தொகை வழங்கப்பட்ட காட்சி.

## தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம் சார்பில்

# பணியின் போது இறந்த பெண் தொழிலாளர் குடும்பத்துக்கு உதவித்தொகை

கோவை, அக்.18—

தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் சார்பாக கோவை, ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்ற தொழிலாளர்களுக்கு இடர் ஏற்படும் காலங்களில் பணம் மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் கோவை – திருச்சி ரோடு, ராமநாதபுரத்தில் அமைந்துள்ள இ.எஸ்.ஐசார் மண்டல அலுவலகத்தில், காப்பீடு செய்யப்பட்ட நபர்களை சார்ந்தோருக்கான உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

இதில் கோவையில் உள்ள தனியார் உணவு நிறுவனத்தில் பணியாற்றி, பணியின் போது இறந்த காயத்ரி என்பவரின் குடும்பத்தினருக்கு சார்ந்தோருக்கான முதல் நிலுவைத் தவணை உதவித்தொகையாக ரூ. ரூ3,55,248 வழங்கப்பட்டது.

மேலும், மாதந்தோறும் அவரின் குடும்பத்தினருக்கு மொத்த மாதாந்திர உதவித்தொகையாக ரூ.11010 நிர்ணயம் செய்து வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில் இ.எஸ்.ஐ சார் மண்டல அலுவலகத்தின் துணை இயக்குனர்(பொறுப்பு) கே.ஆர். ரவிக்குமார், துணை இயக்குனர் கார்த்திகேயன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். மேலும் பண உதவி ஆணையை பெற்றுக் கொண்ட சார்ந்திருப்போரும், காப்பிட்டாளர்களும் தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்திற்கும், அங்குள்ள அலுவலர்களுக்கும் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர்.

அத்துடன் இந்த நிகழ்ச்சியில் குறிப்பிட்ட தொழிற்சாலையின் மனித வள மேம்பாட்டு துறை அதிகாரிகளும், பலன் அடைந்தோரின் குடும்பத்தினரும் கலந்து கொண்டு தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் பல்வேறு பலன்களை பற்றிதெரிந்து கொண்டனர்.

மேலும் அவர்கள், தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகத்தின் பலன்களை பற்றி தங்கள் சுற்றத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதாக உறுதிஅளித்தனர்.

Edited and Published by **C.SENTHILKUMAR** for Malar Publications Ltd., and Printed by **J.P.VIJAYARAJ** at Thanthi press, 766, Avinashi Road, Coimbatore-641 018.